செ.வெ.எண்: 37 நாள்: 21.12.2016

# பத்திரிகைச்செய்தி

## டாம்கோ- ஜெருசலேம் புனிதப்பயணம் செல்ல கிறிஸ்தவர்களுக்கு தமிழக அரசின் ரூ.20000 நிதியுதவி வழங்கும் திட்டம்-காலக்கெடு நீட்டிப்பு

தமிழ்நாட்டைச் சேர்ந்த கிறித்தவர்கள் ஜெருசலேம் புனித பயணம் மேற்கொள்வதற்காக, தமிழக அரசால் நபர் ஒருவருக்கு ரூ. 20000/- நிதி உதவி வழங்கும் திட்டத்தின் கீழ், பயணம் மேற்கொண்டு பயன்பெற விரும்பும் கிறித்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள், 16.12.2016 க்குள் வரவேண்டுமென்று காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டதை, நீட்டிக்கப்பட்டு விண்ணப்பங்கள் 30.12.2016 மாலை 5.45 மணிக்குள் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், 807, (5வது தளம்). அண்ணாசாலை, சென்னை - 600 002 என்ற முகவரிக்கு கிடைக்குமாறு அனுப்பப்பட வேண்டும். இதர நிபந்தைனைகளில் மாற்றம் ஏதுமில்லை. புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த ஜெருசலேம் புனிதப்பயணம் மேற்கொள்ள விரும்பும் கிறிஸ்தவர்கள் உரிய காலத்தில் விண்ணப்பித்து பயனடையுமாறு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**